<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
(கூடுதல் பொறுப்பு)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் நாள் செவ்வாய்கிழமை

*<u>இ.ம.எண். 470/2018 In அசல் வழக்கு எண்: 40/2018</u>*

1. கிருஷ்ணமூர்த்தி
2. ஆறுமுகம் ......மனுதாரர்கள்-பிரதிவாதிகள்

-எதிர்-

1. இராமசாமி
2. ஆறுமுகம் ....... எதிர்மனுதாரர்கள்-வாதிகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 16.3.2022-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.மகேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ராமதாஸ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ் எதிர்மனுதாரர்கள் அ.வ.40-2018 வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*<u>2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>*

எதிர்மனுதாரர்க்ள மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துளள அசல் வழக்கின் அம்சங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் பல்வேறு உண்மை சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுதாரர்களின் வழக்குரை எவ்வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் அ.வ. 40-2018ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை நிராகரிக்க கோரி மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கீழ்கண்ட காரணங்களுக்காக அ.வ. 40-2018 வழக்கின் வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்குரையை தாக்கல் செய்வதற்கு மனுதாரர்கள் தெரிவத்துள்ள வழக்கு மூலம் முற்றிலும் தவறானது என்றும் ஏனெனில் எதிர்மனுதாரர்க்ள வழக்குரையில்

குறிப்பிட்டுள்ள வழக்கு மூலம் எக்காலத்திலும் எழவில்லை என்றும், எதிர்மனதாரர்கள் தங்களது வழக்குரையில் 2017ம் ஆண்டு அக்டோபர் மாதம் வழக்குரையில் குறிப்பிட்டுளள பிரதிவாதிகள் அனைவரும் வழக்கு பி மற்றும் சி சொத்துக்களில் அத்துமீறி பிரவேசித்து கட்டிடப்பணிகளை தொடங்கியதாக குறிப்பிட்டுள்ளதாகவும் உண்மையில் வழக்கு சொத்துக்கள் மனுதாரர்களின் முழுமையான அனுபவத்தில் வெகு நீண்ட காலமாக இருந்து வருவதால் அவற்றில் மனுதாரர்கள் அத்துமீறினார்கள் என்ற வாதத்திற்கே இடமில்லை என்றும் 3ம் பிரதிவாதியான பரங்கிப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலா் எந்த வகையில் வழக்கு சொத்தில் எதிர்மனுதாரர்க்ள குறிப்பிடுவது போல அத்துமீறினார் என்ற விபரம் எதுவும் மேற்படி அ.வ. 40-2018 வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும் வழக்கு சொத்துக்கள் இந்த மனுதாரர்களின் அனுபவத்தில் இருந்து அதிலுள்ள வீடு பழுதாகிவிட்டதால் மனுதாரர்கள் மேற்படி பழுதான பகுதியை இடித்துவிட்டு தற்போது அதே எல்லையில் புதிய வீட்டினை கட்டிவருகிறார் என்ற உண்மையை மறைத்து மனுதாரர்க்ள வழக்கு சொத்தில் அத்துமிறி வீடுகட்டி வருவதாக எதிர்மனுதாரர்கள் தங்களுடைய வழக்குரையில் தெரிவித்துள்ளதாகவும், வழக்கு சொத்து சம்மந்தமாக ஏற்கனவே இந்த எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பூராசாமி மற்றும் தாயார் பவுனாம்பாள் ஆகியோா வழக்கு சொத்தில் மனுதாரர்களின் தகப்பனார் காலஞ்சென்ற தர்மலிங்கம் என்பவரின் அனுபவத்தை இடையூறு செய்ததால் கடந்த 1979ம் ஆண்டு மனுதாரர்களின் தகப்பனார் தர்மலிங்கம் மேற்படி எதிர்மனுதாரர்களின் பெற்றோர் மீது இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ. 419-1979 என்ற வழக்கு உரிய விசாரணைக்கு பின்னர் கடந்த 30.4.1983 தேதியில் மனுதாரரின் தகப்பனார் கோரியவாறு வழக்கு சொத்துக்கள் பொருத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி அ.வ. 419-1979 தீர்ப்பினை எதிர்த்து எதிர்மனுதாரர்கிள்ன பெற்றோர் தாக்கல் செய்த மேல்முறையீடு வழக்க சிதம்பரம் சார்பு நீதிமன்றத்தில் மே.வ. 18-1983 என்ற வழக்கு கடந்த 20.8.1984 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டு நீதிமன்றம் மு.வ. 419-1979 வழக்கின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது என்றும் மேற்படி தீர்ப்புகளை எதிர்த்து இதுவரை எவ்வித மேல்முறையீடுகளும் இல்லாத நிலையில் நீதிமன்ற அ.வ. 419-1979 வழக்கின் தீர்ப்பு இறுதிநிலையை அடைந்துவிட்டதாகவும் மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு வழக்கு சொத்துக்களை பொருத்து என்றைக்கும் அமலிலுள்ள தீர்ப்பு என்றும் இந்நிலையில் 26.11.2017 தேதியில் இந்த எதிர்மனுதாரர்கள் அனுப்பிய அறிவிப்புக்கு கடந்த 4..12.2017 அன்று மனுதாரர் அனுப்பிய பதிலறிவிப்பில் மேற்படி நீதிமன்ற தீர்ப்பகள் பற்றிய முழு விபரமும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவற்றை பற்றி சட்ட ரீதியான எவ்வித விளக்கமும் கொடுக்கப்படாமலும் அந்த தீர்ப்புகளை பற்றி வழக்குரையில் ஒரு வரிக்கூட குறிப்பிடாமலும் மனுதாரர்கள் மிக சாதுரியமாக சட்டத்தினை வளைத்து தாக்கல் செய்துள்ள வழக்குரை முற்றிலும் தவறானது

என்றும் நீதிமன்ற தீர்ப்புகளை மறைத்து இந்த எதிர்மனுதாரர்கள் எப்படியாவது நீதிமன்றத்தினை தவறாக வழி நடத்தி ஈன லாபம் அடையலாம் என்ற எண்ணத்தில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு சொத்து விபரத்தில் ஏ பி சி என்ற 2 வகையான வழக்கு சொத்தினை பிரித்து காட்டும் எதிர்மனுதாராகள் அதற்குரிய ஆவணங்கள் எதையும் வழக்குரையுடன் தாக்கல் செய்யாத நிலையில் எதிர்மனுதாரர்களின் வழக்குரையை கோப்பில் எடுத்ததே தவறு என்று மனுதாரர்கள் தெரிவிப்பதாகவும், வழக்கு சொத்து தொடர்பாக இந்த மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள உரிமை ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஆகியவற்றை மேலோட்டமாக பரிசீலனை செய்தாலே வழக்கு சொத்துக்கள் மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது என்பதும் அவை மனுதாரர்களுக்கு உரிமையானவை என்பதும் எதிர்மனுதாரர்கள் வழக்குரையில் குறிப்பிடும் சங்கதிகளில் துளிக்கூட உண்மையில்லை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாக தெரியும் என்றும் எனவே எதிர்மனுதாரர்கள் அ.வ.40-2018 வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. *<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-</u>*

மனுதாரர் வழக்குரையை நிராகரிக்க கோரி தாக்கல் செய்திருக்கும் மனு சட்டத்தின் பால் நிலைக்கத்தக்கதல்ல என்றும் அ.வ. 419-1979 வழக்கிற்கு எதிராக பூராசாமி மற்றும் பவுனம்மாள் ஆகியோரால் மேல்முறையீட்டு எண். 18-1983ஐ சிதம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தர்க்கல் செய்யப்பட்டு அது 20.8.1984 அன்று முடிக்கப்பட்டது என்றும், தனி வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது என்றும், எனவே இந்த வழக்கை தாக்கல் செய்ய தடை இல்லை என்றும், எதிர்மனுதாரர் அவரது சொத்தில் அவர் கட்டுமானம் செய்ய இந்த மனுதாரருக்கு ஆட்சேபனை இல்லை என்றும், ஆனால் மனுதாரரின் சொத்தை ஆக்கிரமிக்க அவருக்கு உரிமை இல்லை என்றும், அசல் வழக்கு 419-1979 இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாதவை என்றும், இரு வழக்குகளிலும் தரப்பினர் வேறு மற்றும் வழக்கு மூலம் வேறு எனவே இந்த வழக்கை தாக்கல் செய்ய தடையில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியமானது என்பதால் மனுதாரருக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்றும், எப்போது மனுதாரர்கள் வழக்கு சொத்தின் உரிமையில் தலையீடு செய்தாரோ அப்போதுதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், இந்த மனுவானது அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்க்ள இந்த அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முன்வரவில்லை என்றும், மனுதாரர்களுக்கு கூடிவரக்கூடிய கட்சி

இல்லை என்றும், எனவே இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சாட்சியம் விசாரிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பு வாதங்கள் மற்றும் கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது ஏ-அட்டவணை சொத்தில் வாதிகள் மற்றும் 4ம் பிரதிவாதியின் உரிமையை விளம்புகை செய்தும், பி-அட்டவணை சொத்தில் 1, 2 பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுமானத்தை நீக்கி காலி மனையாக வாதியிடம் ஒப்படைவு செய்யவும், வாதிகள் மற்றும் 1,2 மற்றும் 4 பிரதிவாதிகள் சி அட்டவணை சொத்தை கூட்டாக அனுபவம் செய்யவும், சி-அட்டவணை சொத்தை பொது பாதை என விளம்புகை செய்து சி-அட்டவணை சொத்தில் கட்டுமானம் செய்வதை தடை செய்தும் சி-அட்டவணை சொத்தில் 1, 2 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கட்டுமானத்தை நீக்க கோரி செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும், பி-அட்டவணை மற்றும் சி-அட்டவணை சொத்துக்களில் கட்டுமானம் மேற்கொள்வதை 1, 2 பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்றும், பி-அட்டவணை மற்றும் சி-அட்டவணை சொத்துக்களில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கட்டுமானம் செய்வதற்கு 3ம் பிரதிவாதி லோன் கொடுக்கக்கூடாது என பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள் - வாதிகளால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அ.வ.40-2018 வழக்கில் வழக்குரையை நிராகரிக்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மேற்படி மனுவை பரிசீலணை செய்வதற்கு முன்பு கட்டளை 7 விதி 11-ல் சொல்லப்பட்டுள்ள சட்ட வகைமுறையை அறிதல் அவசியமாகிறது. அதன்படி

“<u>வழக்குரையை நிராகரித்தல்:-</u>

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு வழக்குரை நிராகரிக்கப்படுதல் வேண்டும்:

(அ) ஒரு வழக்குமூலத்தையும் வெளிப்படுத்தாவிடத்து:

(ஆ) கோரப்பட்ட பரிகாரம் குறை மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் அம்மதிப்பீட்டைத் திருத்தும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து, வாதி அவ்வாறு செய்யத் தவறுகிறவிடத்து

(இ) கோரப்பட்ட பரிகாரம் உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆனால் வழக்குரையானது குறைவாக முத்திரைவில்லை ஒட்டப்பட்ட தாளின்மீது எழுதப்பட்டிருக்கிறவிடத்தும், நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் தேவைப்படும் முத்திரைத்தாளைக் கொடுக்கும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து வாதி அவ்வாறு செய்யத்தவறுகிறவிடத்தும்:

(ஈ) உரிமை வழக்கானது சட்டம் எதனாலும் தடை செய்யப்பட்டிருப்பதாக வழக்குரையிலுள்ள உரையிலிருந்து தெரியவருகிறவிடத்து:

(உ) இரட்டைப் படிகளில் தாக்கல் செய்யப்படாதிருக்கும் போது,

(ஊ) வாதி விதி 9 இன் வகையங்களை கடைப்பிடிக்கத் தவறியிருக்கும் போது

வரம்புரையாக: மதிப்பீட்டைத் திருத்துவதற்காகவோ அல்லது தேவையான முத்திரைத்தாளைக் கொடுப்பதற்காகவோ நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலமானது நீட்டிக்கப்படுதல் ஆகாது: நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மதிப்பீட்டைத் திருத்துவதற்கு அல்லது, நிலவரத்திற்கேற்ப, உரிய முத்திரைத்தாளைக் கொடுப்பதற்கு, அசாதாரணத் தன்மையதான காரணம் எதனாலும், வாதி தடை செய்யப்பட்டிருந்ததாகவும் அத்தகைய காலத்தை நீட்டிக்க மறுப்பதானது வாதிக்குக் கடுமையான அநீதியை விளைவிக்கும் என்பதாகவும் அந்த நீதிமன்றம் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காகத் திருப்தி கொண்டலான்றி."

என குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில், சிபிசி கட்டளை 7 விதி 11 ல் குறிபபிட்டுள்ள 6 காரணங்களுக்காக மட்டுமே ஒரு வழக்குரையை நிராகரிக்க முடியும், அதன்படி மனுதாரர் தரப்பில் இவ்வழக்கின் வழக்குமூலம் தவறானது என்ற காரணத்திற்காகவும், முன்தீர்ப்பு தடை (Resjudicata) கோட்பாடால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காகவும் இவ்வழக்குரையை நிராகரிக்க கோரப்பட்டுள்ளது. ஆனால் சிபிசி கட்டளை 7 விதி 11ன்படி ஒரு வழக்குரை வழக்கு மூலத்தை வெளிப்படுத்தவில்லை என்ற காரணத்திற்காகவே வழக்குரையை நிராகரிக்க முடியுமே தவிர வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலம் தவறானது என்ற காரணத்திற்காக நிராகரிக்க முடியாது. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலம் சரியானதா தவறானதா என்று வழக்கு விசாரணையில்தான் முடிவு செய்ய இயலும். எனவே இவ்வழக்கின் வழக்குமூலம் தவறானது என்ற காரணத்திற்காக இவ்வழக்கை நிராகரிக்க இயலாது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மனுதாரர்கள் வகையறா எதிர்மனுதாரர்கள் வகையறா மீது தாக்கல் செய்த அ.வ.419-1979 என்ற வழக்கு மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றும் அந்த தீர்ப்பின் மீது எதிர்மனுதாரர்களால் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, அது தள்ளுபடி ஆகி அ.வ.419-1979 வழக்கின் தீர்ப்பு உறுதியாகி இதுவரையில் நிலுவையில் உள்ளதால் இந்த அசல் வழக்கு முன்தீர்ப்பு தடையால்

பாதிக்கப்பட்டுள்ளது என மனுதாரர்களால் வாதிடப்பட்டிருந்தாலும், அசல் வழக்கை நிராகரிப்பதற்கு சிபிசி கட்டளை 7 விதி 11ல் சொல்லப்பட்டுள்ள சட்ட வகைமுறைகளில் *ஒன்றாக முன்தீர்ப்பு தடை கோட்பாடு* குறிப்பிடப்படவில்லை. மேலும் இந்த அசல் வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை அசல் வழக்கின் விசாரணையிலேயே முடிவு செய்ய முடியும்.

மேலும் ஒரு அசல் வழக்கு நிராகரிக்கப்பட வேண்டுமெனில், அது அசல் வழக்கின் பிராது சங்கதிகளின் அடிப்படையிலே மட்டும் நிராகரிக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் பிராது சங்கதிகள் வழக்கை நிராகரிக்கத்தக்க வகையில் இல்லை என்றும், இந்த மனுதாரர், அசல் வழக்கை நிராகரிக்க கோரியுள்ள மேற்படி இரண்டு காரணங்களும் அசல் வழக்கை நிராகரிக்கக் கூடிய காரணங்கள் இல்லை என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மனுதாரர்- பிரதிவாதி இம்மனுவில் கூறியுள்ள கூற்றுகள் குறித்து இம்மனுவில் முடிவு செய்ய இயலாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பிரதிவாதியின் எதிர்வழக்குரை சங்கதிகளின் உண்மைத் தன்மை குறித்து தற்சமயம் முடிவு செய்ய இயலாது அசல் வழக்கின் விசாரணையின் போது மட்டுமே அது குறித்து தீர்மானிக்க முடியும். இந்த மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள அசல் வழக்கை முன்னிடுவதற்கு எதிர்மனுதாரர் வழக்குரையில் கூறியுள்ள வழக்கு மூலம் முற்றிலும் தவறானது மற்றும் மேற்படி வழக்கு இந்நீதிமன்ற விசாரணைக்கு எந்தவிதத்திலும் தகுதியற்ற ஒன்று என்ற கூற்று ஏற்புடையதாக இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

இறுதியில். மனுதாரர் தாக்கல் செய்த இந்த இடைமனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்ல சொல்ல அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-V.Geetha)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(FAC).

<u>மனுதாரர் தரப்பில் சான்றாவணம் :</u>

| | | | |
|---|---|---|---|
| ம.த.சா.1 | - | 30.4.1983 | சிதம்பரம் மாவட்ட உரிமையியல் நீதினம்ற அ.வ. 419-1979ன் தீர்ப்பாணை நகல் |
| ம.த.சா.2 | - | 20.8.1984 | சிதம்பரம் சார்பு நீதிமன்ற மே.வ. 18-1983ன் |

| | | | |
|---|---|---|---|
| | | | தீர்ப்புரை நகல் |
| ம.த.சா.3 | - | 25.11.2017 | எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு அனுப்பிய அறிவிப்பு சார்வு நகல் |
| ம.த.சா.4 | - | 4.12.2017 | மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பிய பதிலறிவிப்பு உண்மை நகல் |
| ம.த.சா.5 | - | 13.5.1988 | 1ம் மனுதாரர் பெயரிலுள்ள கிரய பத்திரம் நகல் |
| ம.த.சா.6 | - | 13.5.1988 | 1ம் மனுதாரர் பெயரிலுள்ள கிரய பத்திரம் நகல் |
| ம.த.சா.7 | - | 20.3.1979 | மனுதாரர்களின் தகப்பனார் பெயரிலுள்ள கிரய பத்திரம் நகல் |
| ம.த.சா.8 | | 10.8.1988 | 1ம் மனுதாரர் பெயரிலுள்ள கிரய பத்திரம் நகல் |
| ம.த.சா.9 | | 27.7.1959 | மனுதாரர்களின் தகப்பனார் பெயரிலுள்ள கிரய பத்திரம் நகல் |
| ம.த.சா.10 | | 28.1.1976 | 1ம் மனுதாரர் பெயரிலுள்ள கிரய பத்திரம் நகல் |

இருதரப்பிலும் சாட்சியம்: இல்லை.
எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணம்: இல்லை.

(Sd/-V.Geetha)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(FAC)